**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.**
**முன்னிலை திரு.S. ராஜேஷ் கண்ணன், பி.ஏ., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்–III , தஞ்சாவூர்,**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு (மு.கூ.பொ)**

**2026ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ஆம் நாள் வியாழக்கிழமை**

**சி.ஆர்.எம்.பி.எண்.471/2026**

சச்சின், வயது 21/2026
த/பெ. பெரியசாமி ... மனுதாரர்/எதிரி

/ எதிர் /

அரசுக்காக,
காவல் உதவி ஆய்வாளர்,
திருவையாறு காவல் நிலையம்,
குற்ற எண்.190/2026 U/s. 331(4),
305(a) of BNS ... எதிர்மனுதாரர்/குற்றமுறையீட்டாளர்

இம்மனு இன்று விசாரணைக்கு வந்தபோது. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M. முகேஷ், B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், வாதுரை கேட்டும், அரசு தரப்பு ஆட்சேபனை பரிசீலனை செய்தும், வழக்கு ஆவணங்கள் பரிசீலணை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்....

**உத்தரவு**

1. மனுதாரர்/எதிரி பிரிவு 480 BNSS ன் கீழ் பிணை கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

2.கற்றறிந்த மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் மனுதாரருக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. மனுதாரர் அப்பாவி. அரசு தரப்பில் சொல்லப்படுவதுபோல், மனுதாரர் எந்த குற்ற செயலும் செய்யவில்லை. மனுதாரருக்கு நிலையான முகவரி உள்ளது. மனுதாரருக்கு பிணை வழங்கும் பட்சத்தில் பிணைக்கு உரிய ஜாமின்தாரர்கள் வழங்கவும், இந்நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவும், மனுதாரர் தயாராக இருக்கிறார். எனவே மனுதாரர் சிறையில் இருந்து வரும் காலத்தை கருத்தில் கொண்டு அவருக்கு பிணை வழங்க வேண்டும் என்று வாதுரைத்தார்.

3. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்து பார்க்கப்பட்டது. மனுதாரர் கடந்த 15.05.2026ஆம் தேதி முதல் இன்று வரை சிறையில் இருந்து வருகிறார்கள். 67 நாட்களை கடந்த நிலையிலும், இவ்வழக்கில் இன்னும் குற்ற இறுதியறிக்கை அல்லது இடைக்கால அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை. எனவே இவ்வழக்கு சூழ்நிலை மற்றும் சங்கதிகளை கருத்தில் கொண்டு மனுதாரர்/எதிரிக்கு கீழ்கண்ட நிபத்தனைகளுடன் பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

**<u>நிபந்தனைகள்</u>–**

1) மனுதாரர்/எதிரி ரூ.10,000/–க்கு பிணைய ஆவணம் எழுதி கொடுக்க வேண்டும், மேலும் மனுதாரர்கள் சார்பில் மேற்படி தொகைக்கு இரு தனி நபர் ஜாமின்தார்கள் வழங்கவேண்டும்.
2) மனுதாரர், எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் விசாரணைக்கு அழைக்கும் போது ஆஜராக வேண்டும் .
3) மனுதாரர் இவ்வழக்கு சாட்சிகளை கலைக்க முற்படக்கூடாது.
4) மனுதாரர் தலைமறைவாக கூடாது. முகவரி மாற்றம் இருந்தால் எதிர்மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும்.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு **2026–ஆம்** ஆண்டு **ஆகஸ்ட்** மாதம் **13–ஆம்** நாள் என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJESH KANNAN

Digitally signed by RAJESH KANNAN
Date: 2026.08.13 18:40:02 +1200

நீதித்துறை நடுவர்,
திருவையாறு. (முகூபொ)